தினமணி

**விவசாயிகளுக்கு நேரடியாக அரசு உதவிகள் வேளாண் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன்**

First Published : 11 Jul 2011 08:29:35 AM IST

ஈரோடு, ஜூலை 10: விவசாயிகளுக்கு நேரடியாக அரசு உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட ஈரோடு துல்லிய பண்ணை உற்பத்தியாளர் சங்கம் சார்பில் ஈரோடு மாவட்டம், சிவகிரியில் துல்லிய பண்ணை திட்டக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கண்காட்சியைத் திறந்து வைத்து அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கூறியது:

தமிழகத்தில் 12 லட்சம் விவசாயிகள் பயனடையும் வகையிலும், மழையால் பயிர்கள் சேதமடைவதைத் தடுக்கும் வகையிலும் மேட்டூர் அணையிலிருந்து முன்கூட்டியே தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டார்.

மேலும், உரம், விதை, பூச்சிமருந்து உள்ளிட்ட இடுபொருள்கள் தேவையான அளவு கிடைக்கவும் முதல்வர் நடவடிக்கை எடுத்துள்ளார். விவசாயம் புத்துணர்வு பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முதல்வர் எடுத்து வருகிறார். விவசாய விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், உற்பத்திப் பொருள்களுக்கான விலையை விவசாயிகளே நிர்ணயம் செய்யும் நிலையை உருவாக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதையொட்டி, அரசு வழங்கும் மானியம் மற்றும் பிற உதவிகள் அனைத்தும் விவசாயிகளை நேரடியாகச் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் வேளாண் துறையில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. மண்புழு உரம் தயாரிப்பதில் கூட முறைகேடுகள் நடைபெறறுள்ளது கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் பேசுகையில், பாசனத்துக்கு வாய்க்கால்களில் தண்ணீர் திறக்கும் முன்பே, பாசன வாய்க்கால்கள் அனைத்தும் முழுமையாகச் சீரமைக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கடைமடைப் பகுதியிலும் விவசாயம் சிறப்பாக நடைபெறுகிறது. அனைத்து பாசன வாய்க்கால்களிலும் குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தோப்பு என்.டி.வெங்கடாசலம், எஸ்.ரமணீதரன், ஆர்.என்.கிட்டுசாமி, நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் சந்தானம் மற்றும் அதிகாரிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்ட செயல்விளக்கம்**

First Published : 11 Jul 2011 07:14:43 AM IST

திருவண்ணாமலை, ஜூலை 10: திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி சனிக்கிழமை மெய்யூர் கிராமத்தில் நடைபெற்றது.

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் துரிஞ்சலாறு வடிநிலப் பகுதியில் 15 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மெய்யூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு திட்ட அலுவலர் முனைவர் பாஸ்கரன் தலைமை தாங்கி 40-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

முன்னோடி விவசாயி கருணாநிதி தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் அமலா, கோகிலா, பார்த்தசாரதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**"மூலிகைப் பயிர் சாகுபடிக்கு 75 சதவீதம் வரை மானியம்'**

First Published : 11 Jul 2011 07:42:14 AM IST `

காஞ்சிபுரம், ஜூலை 10: காஞ்சிபுரம் மாவட்டத்தில் மூலிகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

÷இது குறித்து செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

÷இத் திட்டத்தின் மூலம் மூலிகை பயிர் சாகுபடிக்கு வருடாந்திர பயிர்களுக்கு 75 சதவீதம் வரையும், ஆண்டு பயிர்களுக்கு 20 சதவீதம் வரையும் பயிர்சாகுபடி செலவில் மானியமாக வழங்கப்படுகிறது.

÷ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 4 ஹெக்டேருக்கு இது வழங்கப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்கள்**

First Published : 11 Jul 2011 07:42:29 AM IST

காஞ்சிபுரம், ஜூலை 10: காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விவசாயப் பணிகளுக்கு தேவையான இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

÷இது குறித்து மாவட்ட ஆட்சியர் எஸ்.சிவசண்முகராஜா வெளியிட்ட அறிக்கை: வேளாண் பணிகளுக்கு இயந்திரங்கள் வாங்குவதற்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

÷அதன்படி டிராக்டர் வாங்குவதற்கு 25 சதவீதம் வரை (அதிகபட்சம் ரூ.45 ஆயிரம்) மானியம் வழங்கப்படுகிறது.

÷பவர் டில்லர் வாங்குவதற்கு 40 சதவீதம் வரை (அதிகபட்சமாக ரூ.45 ஆயிரம்) மானியம் வழங்கப்படுகிறது.

÷ரோட்டவேட்டர் வாங்குவதற்கு

40 சதவீதம் வரை (அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரை) மானியம் வழங்கப்படுகிறது.

÷அதேபோல் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை இயக்கவும், பராமரிக்கவும் பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.

**காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்ட செயல்விளக்கம்**

First Published : 11 Jul 2011 07:14:43 AM IST

திருவண்ணாமலை, ஜூலை 10: திண்டிவனம் எண்ணெய் வித்துகள் ஆராய்ச்சி நிலையம் சார்பில் காய்கறிகள் சாகுபடியில் துல்லிய பண்ணைத் திட்டம் குறித்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி சனிக்கிழமை மெய்யூர் கிராமத்தில் நடைபெற்றது.

நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் துரிஞ்சலாறு வடிநிலப் பகுதியில் 15 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மெய்யூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமுக்கு திட்ட அலுவலர் முனைவர் பாஸ்கரன் தலைமை தாங்கி 40-க்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

முன்னோடி விவசாயி கருணாநிதி தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இளநிலை ஆராய்ச்சியாளர்கள் அமலா, கோகிலா, பார்த்தசாரதி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**"விவசாயிகள் பாசிப்பயறை இருப்பு வைக்கவேண்டாம்'**

First Published : 11 Jul 2011 07:15:21 AM IST

திருவண்ணாமலை, ஜூலை 10: விலை உயர வாய்ப்பில்லை என்பதால் விவசாயிகள், பாசிப்பயறு மற்றும் உளுந்து இருப்பு வைக்காமல் அவற்றை உடனே விற்க வேண்டும் என வேளாண் துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் மா.சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழகத்தில் கடந்த ஆண்டில் உளுந்தின் விலை கிலோ ரூ.56 ஆகவும், பாசிப்பயறு விலை ரூ.62 ஆகவும் இருந்தது. தற்போது உற்பத்தி அதிகரிப்பு காரணமாக உளுந்து கிலோ ரூ.48 ஆகவும், பாசிப்பயறு ரூ.38 ஆகவும் குறைந்துள்ளது.

மேலும் 2010 காரிப் மற்றும் ராபி பருவத்தில் பெய்த நல்ல மழை காரணமாகவும் நம் நாட்டில் பயறு வகைகளில் உற்பத்தி அதிகரித்துள்ளது.

உளுந்து மற்றும் பாசிப்பயறை உடனே விற்பனை செய்யலாமா அல்லது சிறிது காலம் சேமித்து வைக்கலாமா என்ற விவசாயிகள் சந்தேகத்துக்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக்ததில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆய்வு மேற்கொண்டது.

அதன்படி ஜூன், ஜூலை 2011-ல் உளுந்து விலை கிலோ ரூ.46.40 ஆகவும், பாசிப்பயறு ரூ.41.42 ஆகவும் இருக்கும் என தெரியவந்துள்ளது. விலையேற்றத்துக்கான வாய்ப்பு இல்லாமையால் இவ்விரு பயறுகளையும் விவசாயிகள் இருப்பு வைக்காமல் உடனே விற்பனை செய்து லாபம் ஈட்டலாம் என்றார் சண்முகம்.

**காலிங்கராயன் பாசனப் பகுதியில் நெல் சாகுபடி பணிகள் தீவிரம்**

First Published : 10 Jul 2011 04:12:01 PM IST

ஈரோடு, ஜூலை 9: காலிங்கராயன் வாய்க்கால் பாசனப் பகுதியில் முதல் போக நெல் சாகுபடிப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, வேளாண் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த ஆண்டில் 115 லட்சம் டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எந்த ஆண்டும் இல்லாத வகையில், ஜூன் 12-ம் தேதிக்குப் பதிலாக, ஜூன் 6-ம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பவானி சாகர் அணையிலிருந்து காலிங்கராயன் வாய்க்காலுக்கு ஜூன் 19-ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

காலிங்கராயன் வாய்க்கால் பாசனப் பகுதியான ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி பகுதிகளில் மஞ்சள் சாகுபடிப் பணிகள் துவங்கியுள்ளன. அதேபோல், முதல்போக நெல் சாகுபடிப் பணிகளும் தற்போது துவங்கியுள்ளன.

காலிங்கராயன் வாய்க்கால் பகுதியான கருங்கல்பாளையம், வைராபாளையம், கிருஷ்ணம்பாளையம், சுண்ணாம்பு ஓடை, பாலக்காட்டூர், பி.பெ.அக்ரஹாரம், ஆர்.என்.புதூர் உள்ளிட்ட பகுதிகளில் வயல்களைத் தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

நெல் நாற்று விடப்பட்டு, நடவு செய்யவும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தற்போது வயல்களில் டிராக்டர் வைத்து உழுது வருகின்றனர். அந்தப் பணி முடிந்ததும் நெல் நாற்றுகள் நடவு செய்யப்படும். நெல் சாகுபடிக்குத் தேவையான விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் அனைத்தும் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உரங்கள் தேவையான அளவு கிடைப்பதால், விவசாயிகள் சாகுபடிப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தினமலர்

## உள்நாட்டில் தேவை உயர்வால் முந்திரி ஏற்றுமதி சரிவு

ஜூலை 11,2011,02:13



கொச்சி:உள்நாட்டில், முந்திரிக்கான தேவை அதிகரித்து வருவதாலும், இறக்குமதி செய்யப்படும் முந்திரி கொட்டையின் விலை உயர்ந்துள்ளதாலும்,நாட்டின் முந்திரி ஏற்றுமதி சரிவடைந்துள்ளது. உள்நாட்டில், முந்திரி கொட்டை உற்பத்தி குறைவாக உள்ளது. இதை ஈடு செய்யும் வகையில், மேற்கு ஆப்ரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து, இந்தியா,முந்திரி கொட்டையை இறக்குமதி செய்து, தரம் பிரித்து முந்திரியாக ஏற்றுமதி செய்து வருகிறது.முந்திரி கொட்டை அதிகளவு உற்பத்தி செய்யும் நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்னையால், சர்வதேச சந்தையில், இதன் விலை உயர்ந்துள்ளது. இந் நிலையில், உள்நாட்டிலும், முந்திரிக்கான தேவை மிகவும் அதிரித்துள்ளது என, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம் பாட்டு கவுன்சில் தெரிவித்துள்ளது.கடந்த 2010-11ம் நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான 10 மாத காலத் தில், இந்தியாவின் முந்திரி ஏற்றுமதி, முந்தைய ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது, அளவின் அடிப்படையில் 25.5 சதவீதமும், மதிப்பின் அடிப்படையில் 9.4 சதவீதமும் குறைந்துள்ளது.சென்ற நிதியாண்டின், முதல் 10 மாத காலத்தில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி, 76 ஆயிரத்து 120 டன்னாக இருந்தது. அதேசமயம், 2009- 10ம் நிதியாண்டின் இதே காலத்தில், இதன் ஏற்றுமதி, 1 லட்சத்து 2 ஆயிரத்து 177 டன்னாக இருந்தது.தற்போது, உள்நாட்டில், முந்திரியின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், இதன் பயன்பாடு எந்த அளவிற்கு உள்ளது என்பது குறித்து, இன்னும் ஒரு சில வாரங்களில் தெரிய வரும் என, முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் தெரிவித்துள்ளது.

**புண்ணாக்கு ஏற்றுமதி 58 சதவீதம் அதிகரிப்பு**

ஜூலை 11,2011,02:12



புதுடில்லி:சென்ற ஜூன் மாதம், நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி 2 லட்சத்து 50ஆயிரத்து 335 டன்னாக உயர்ந்துள்ளது. இது,சென்ற ஆண்டு, இதே மாதத்தில் ஒரு லட்சத்து 58ஆயிரத்து 750 டன்னாக இருந்தது.எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், தென் கிழக்கு ஆசிய நாடுகளில்தேவை உயர்ந்துள்ளதாலும், புண்ணாக்கு ஏற்றுமதி வளர்ச்சி அடைந்துள்ளதாக இத்துறை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.மொத்த ஏற்றுமதியில்,சோயா புண்ணாக்கு, ஒரு லட்சத்து 17ஆயிரத்து 600 டன்னாக உள்ளது. இது, சென்ற ஆண்டு ஜூன் மாதம் 98 ஆயிரத்து 400 டன் என்ற அளவில் இருந்தது. சென்ற மார்ச் மாதத்துடன் முடிவடைந்த 2010 -11ம் நிதியாண்டில், புண்ணாக்கு ஏற்றுமதி 51 லட்சம் டன்னாக உயர்ந் துள்ளது. இது, முந்தைய நிதியாண்டில் 32 லட்சம் டன்னாக இருந்தது.

**நெல், மணிலா விதைகள் மானியத்தில் விநியோகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,00:24 IST

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஆடிப்பருவத்திற்கான விதைகள் மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது.திருக்கோவிலூர் வட்டாரத்தில் ஆடிப்பருவத்திற்கு ஏற்ற விதை ரகங்கள் வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் விற்கப்படுகின்றன. இப்பருவத்திற்கு ஏற்ற விதைகளை விவசாயிகள் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தில்ஒரு கிலோவிற்கு 5 ரூபாய் மானியத்திலும், விதை கிராமத் திட்டத்தில் தேர்வான விவசாயிகள் 50 சதவீத மானியத்தில் நெல், பயறு வகை, எண்ணெய் வித்து விதைகளை வாங்கி பயனடையலாம்.தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் ஜிப்சம், ஜிங்க் சல்பேட், பசுந்தாள் உரவிதைகளும் விற்கப்படுகிறது. இந்த வாய்ப்பை

விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என திருக்கோவிலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

**மஞ்சள் விதைப்பு பற்றி விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,02:48 IST

ஈரோடு: உயர் தொழில்நுட்பத்துடன் மஞ்சள் சாகுபடி மேற்கொள்வது குறித்து, மாவட்ட தோட்டக்கலைத் துணை இயக்குநர் ராபர்ட் வின்சென்ட் யோசனை கூறியுள்ளார். அவர் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் பி.எஸ்.ஆர்., 1, பி.எஸ்.ஆர்., 2, பி.டி.எஸ்., 8, பி.டி.எஸ்., 10 மற்றும் சம்பா போன்ற மஞ்சள் ரகங்கள் பரவலாக பயிராகிறது. ஜூலை மாதத்துக்குள் மஞ்சள் நடவு செய்வது உகந்தது. நிலம் தயாரிப்பின் போது நல்ல வடிகால் வசதி உறுதி செய்துகொள்ள வேண்டும். கடைசி உழவின்போது ஏக்கருக்கு நான்கு டன் தொழு உரம் கட்டாயம் இடவேண்டும். கடைசி உழவுக்கு முன் அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ மூரேட் ஆஃப் பொட்டாஷ் இரும்பு சல்பேட், 12 கிலோ துத்தநாக சல்பேட் ஆகியவற்றை கலந்து இடவேண்டும்.

ஏக்கருக்கு 600 முதல் 750 கிலோ விதை மஞ்சள் பயன்படுத்தலாம். கிழங்கு அழுகல் மற்றும் செதில்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த நடவுக்கு முன் விதைக் கிழங்குகளை கார்பன்டசிம் ஒரு கிராம் மற்றும் மோனோ குரோட்டாபாஸ் இரண்டு மில்லி சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்த கரைசலில், 30 நிமிடங்கள் ஊற வைக்கவேண்டும். நேர்த்தி செய்த விதைக் கிழங்குகளை 45 செ.மீ., இடைவெளியில் பார் அமைத்து, 15 செ.மீ., இடைவெளியில், 4 செ.மீ., ஆழத்தில் நடவேண்டும். நடவுக்கு முன்பும், மூன்று நாள் கழித்தும் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 30, 60, 90 நாட்களில் கையால் களை எடுக்க வேண்டும்.

மஞ்சள் ஊடுபயிராக வெங்காயம், கொத்தமல்லி, தண்டுக்கீரை, பயறுவகை, வெந்தயக்கீரை ஆகியவற்றை பயிரிடலாம். தவிர, வாழை, மிளகாய், கனகாம்பரம், கத்தரி போன்ற பயிர்களை ஊடுபயிராக பயன்படுத்தக் கூடாது. செண்டுமல்லி ஊடுபயிராக பயரிட்டால், மஞ்சளில் நூற்புழுத் தாக்குதலை ஓரளவு கட்டுப்படுத்தலாம். தோட்டக்கலைத் துறை வட்டார அலுவலகங்களை, விவசாயிகள் அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**வனப்பகுதியில் பிடிபடும் விநோத பறவை**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,02:47 IST

ஈரோடு: ஈரோட்டில் வனப்பகுதியில் பிடித்துவரப்பட்ட விநோத பறவையின் தோலை உறித்து, காடை எனக்கூறி விற்பனை செய்து வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், சத்தியமங்கலம் பகுதியில் மேற்கு தொடர்ச்சி மலை அமைந்துள்ளது. இங்கு வன விலங்குகளுடன், பல வித பறவைகளும் உள்ளன. இறைச்சிக்காக மான், முயல், சிட்டுக்குருவி, காடை, காட்டுப்புறா, முயல் போன்றவற்றை இன்றும் வேட்டையாடி, ஈரோட்டில் உள்ள கடைகளுக்கு விற்கின்றனர். முன்காலத்தில் வனப்பகுதியில் காணப்பட்ட பல்வேறு வகையான சிறிய பிராணிகள் மற்றும் பறவை இனங்கள் தற்போது முற்றிலுமாக அழிந்து போயிற்று.

ஈரோடு வீரப்பன்சத்திரம் பகுதியில், மாலை நேர சில்லி சிக்கன் கடைகளில், தற்போது காடை ஃபிரை விற்பனை அதிகரித்துள்ளது. பெரும்பாலும் இங்குள்ள கடைகளுக்கு தேவையான காடைகள், வனப்பகுதியில் பிடிக்கப்பட்டு, தோலுரித்து, பைகளில் போட்டு கொண்டு வந்து, நகரில் உள்ள கடைகளில் விற்றுச்செல்கின்றனர். சாதாரணமாக காடை தோலுரித்தபின் 250 கிராமுக்கும் குறைவான எடை இருக்கும். தவிர அதன் கழுத்தின் நீளம் குறுகி காணப்படும். ஆனால், வனப்பகுதியில் இருந்து கொண்டு வந்து, காடை எனக்கூறி விற்கப்படும் பறவை, 500 கிராமுக்கு மேல் எடையும், கழுத்துப்பகுதி கொக்கு போல நீண்டும் இருக்கிறது.

தோலுரிக்கப்பட்ட நிலையில் இருப்பதால், இது எந்த வகை பறவை என கண்டறிய முடியவில்லை. நான்கு தோலுரித்த முழு பறவை இறைச்சியை, 150 ரூபாய்க்கு விற்கின்றனர். பெரும்பாலும் வார இறுதி நாட்களில் அதிகப்படியாக பிடித்து வந்து விற்பனை செய்கின்றனர். இதுபோன்ற செயல், பலரை சந்தேகத்துக்கு ஆளாக்கியுள்ளது. இதை சாப்பிடும் மக்களுக்கு நோய் பரவும் முன்பாக, வேட்டையாடுவதை வனத்துறையும், மக்களை காப்பாற்ற சுகாதாரத்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**சேஷாங்கனூரில் மண் பரிசோதனை**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,00:22 IST

விழுப்புரம்: கண்டமங்கலம் ஒன்றியம் சேஷாங்கனூர் கிராமத்தில் மண் பரிசோதனை முகாம் நடந்தது.

வேளாண்மை துறை சார்பில் கிராம ஏற்பு திட்டத்தின்படி சேஷாங்கனூரில் மண் பரிசோதனை மற்றும் மண் வள அட்டை வழங்கும் விழா நடந்தது. மோகன் வரவேற்றார். ராமகிருஷ்ணன்

தலைமை தாங்கினார். ரவிச்சந்திரன், கமலக் கண்ணன், வேணுகோபால் முன்னிலை வகித்தனர்.தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண்மை அலுவலர்கள் சம்பத், ராமசாமி பேசினர். உதவி வேளாண்மை அலுவலர் சேகர், ஆய்வக உதவியாளர் மண்ணாங்கட்டி கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,00:19 IST

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் அடுத்த சொரையப்பட்டில் வேங்கூர் மெட்ராஸ் சுகர்ஸ் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு இயந்திரமயமாக்குதல் குறித்த வயல் வெளி செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது.ஆலை முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் ராஜசேகர் முன்னிலை வகித்தார்.கூலி ஆட்கள் பற்றாக்குறையால் கரும்பு சாகுபடியில் நவீன இயந்திரத்தை பயன்படுத்தி நன்மை பெறுவது குறித்து விளக்கினர். ஆலை கரும்பு ஆலோசகர் பாண்டியன், விவசாயி விஸ்வநாதன், பழனிவேல், மணலூர் பேட்டை கோட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கரும்பு கோட்ட அலுவலர் ராக்கியணன் நன்றி கூறினார்.

**இயற்கை விவசாய பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,00:17 IST

விழுப்புரம்: பாரதீய கிசான் சங்கம் சார்பில் இயற்கை விவசாய பயிற்சி முகாம் நடந்தது.தமிழ்நாடு பாரதீய கிசான் சங்கம் சார்பில் இயற்கை விவசாய பயிற்சி முகாம் தோகைப்பாடி வள்ளல் சேஷாத்திரி மகாலில் நடந்தது. மாவட்ட கவுரவத் தலைவர் லிங்கராமன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் பசுபதி வரவேற்றார். நிர்வாகிகள் சொக்கலிங்கம், வடிவேல், ராமலிங்கம், ஜெயபால், அய்யனார், கலியமூர்த்தி முன்னிலை வகித்தனர்.கிசான் சங்க நிர்வாகிகள் பட்டாபி, கோபாலகிருஷ்ணன், கோபி, ராமமூர்த்தி, ரமேஷ்குமார், சந்திரமவுலி, சுப்பரமணியன், தேவராஜ், கல்யாண்குமார் பேசினர். நிர்வாகி குமாரசாமி நன்றி கூறினார்.

**துல்லிய பண்ணைய பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,00:16 IST

செஞ்சி: திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி மையம் சார்பில் நீர்வள நில வள திட்டத்தில் துரிஞ்சலாறு மற்றும் வராகநதி வடிநிலப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் மெய்யூர் கிராமத்தில் நடந்தது.எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய திட்ட அலுவலர் பாஸ்கரன் பயிற்சியளித்தார். மண் பரிசோதனை, துல்லிய பண்ணையம், உரப்பாசனம், வாழை மற்றும் காய்கனிகளில் உயர் உற்பத்தி எடுப்பதற்கான தொழில் நுட்பம் குறித்து விளக்கப்பட்டது.வாழை மற்றும் காய்கனிகள் பயிர் செய்ய துல்லிய பண்ணைய பயிற்சியளித்தனர்.முன்னோடி விவசாயி கருணாநிதி தனது அனுபவங்களை விவசாயிகளிடம் விளக்கினார். முகாம் ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர்கள் அமலா, கோகிலா செய்திருந்தனர். இளநிலை ஆராய்ச்சியாளர் பார்த்தசாரதி நன்றி கூறினார். இதில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**வேளாண்மைமாணவிக்கானபயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,03:04 IST

குளித்தலை: குளித்தலையில் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவிகளுக்கான பட்டறிவு பயிற்சி முகாம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது.முகாமில், வேளாண் துறையில் மகளிர் பங்கு, விவசாய பணிகளால் பொருளாதார முன்னேற்றம், இயற்கை உரம், மண்புழு உரம் அவசியம், மஞ்சள் காவியா தயாரிக்கும் செயல்முறைகள் குறித்து மாணவிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.கிராமியம் இயக்குநர் நாராயணன், மாநில பயிற்றுநர், மாவட்ட பயிற்றுநர்கள் மலையப்பன், பெரியசாமி, கல்லூரி பேராசிரியர்கள் தியாகராஜன், சசிகலா, நித்யா, ஆவுடைதாய் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மாம்பழ விலை வீழ்ச்சி : பறிக்க ஆர்வம் இல்லை**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,02:20 IST

தேவாரம் : விலை குறைவால் கல்லாமை, காசா ரக மாம்பழங்களை பறிக்க விவசாயிகள் ஆர்வம் காட்டாததால் மரத்திலேயே பழுத்து மாம்பழங்கள் வீணாகின்றன.

தேவாரம் பகுதியில் டி.மீனாட்சிபுரம், சாக்குலூத்து, பிள்ளையாரூத்து, கோயில்காடு பகுதியிலும், போடி பகுதியில் குரங்கணி, கொட்டகுடி, பிச்சாங்கரை, கொம்புதூக்கி பகுதியிலும் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மாங்காய் சாகுபடி நடக்கிறது. இந்த ஆண்டு உரிய நேரத்தில் பருவமழை பெய்ததால் மா நல்ல விளைச்சல் கண்டது. அதிக விளைச்சல் மற்றும் வெளி

மார்க்கெட்டில் கூடுதல் வரத்து காரணமாக விலை குறைந்தது.
மா விவசாயி மணி கூறியதாவது: மாம்பழத்திற்கு உரிய விலை கிடைக்காததால், அதிக விலைக்கு போகும் காலேபாடி, காதர், செந்தூரம், பங்கனபள்ளி போன்றவற்றை பறிப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். குறைந்த விலை போகும் கல்லாமை, காசா ரக காய்கள் கிலோ 5 ரூபாய்க்கும் குறைவாக விற்கிறது. கூலி ஆட்கள் வைத்து பறித்து, வாடகை வாகனத்தில் கொண்டு வந்து சந்தையில் விற்பதால் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் இந்த ரக மாம்பழங்கள் பறிக்கப்படாமல் மரத்திலேயே விட்டு வைத்துள்ளனர்,'என்றார்.

**திராட்சை ஆராய்ச்சி நிலைய பணிகள் ரத்து**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,02:19 IST

கம்பம் : காமயகவுண்டன்பட்டி அருகே அடிக்கல் நாட்டப்பட்ட திராட்சை ஆராய்ச்சி நிலைய பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளது.
நியமிக்கப்பட்ட உதவி பேராசிரியர் பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரிக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டுள்ளார். ஆண்டு முழுவதும் திராட்சை சாகுபடி செய்யப்படும் பகுதியாக கம்பம் பள்ளத்தாக்கு மட்டுமே உள்ளது. பிற பகுதிகளில் ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே அறுவடை செய்வார்கள். கம்பம் பகுதியில் மட்டும் ஆண்டிற்கு மூன்று முறை திராட்சை அறுவடை செய்யப்படுகிறது.
மண்வளம், சீதோஷ்ணநிலை, மழை அளவு போன்ற காரணங்களால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் திராட்சை சாகுபடி செய்யப்படுகிறது. காமயகவுண்டன்பட்டி சண்முகாநதி அணை அருகே திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. உதவி பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். தற்காலிக அலுவலகம் அமைக்கப்பட்டது.
நிறுத்தம்: திராட்சை ஆராய்ச்சி நிலைய பணிகளை நிறுத்தி விடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. போதிய நிதி ஒதுக் காததால் பணியை ரத்து செய்ததாக அதிகாரிகள் தெரிவித் தனர். இது விவசாயிகள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளது.

**மஞ்சள் விதைப்பு பற்றி விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 11,2011,02:48 IST

ஈரோடு: உயர் தொழில்நுட்பத்துடன் மஞ்சள் சாகுபடி மேற்கொள்வது குறித்து, மாவட்ட தோட்டக்கலைத் துணை இயக்குநர் ராபர்ட் வின்செென்ட் யோசனை கூறியுள்ளார். அவர் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் பி.எஸ்.ஆர்., 1, பி.எஸ்.ஆர்., 2, பி.டி.எஸ்., 8, பி.டி.எஸ்., 10 மற்றும் சம்பா போன்ற மஞ்சள் ரகங்கள் பரவலாக பயிராகிறது. ஜூலை மாதத்துக்குள் மஞ்சள் நடவு செய்வது உகந்தது. நிலம் தயாரிப்பின் போது நல்ல வடிகால் வசதி உறுதி செய்துகொள்ள வேண்டும். கடைசி உழவின்போது ஏக்கருக்கு நான்கு டன் தொழு உரம் கட்டாயம் இடவேண்டும். கடைசி உழவுக்கு முன் அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 22 கிலோ யூரியா, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 12 கிலோ மூரேட் ஆஃப் பொட்டாஷ் இரும்பு சல்பேட், 12 கிலோ துத்தநாக சல்பேட் ஆகியவற்றை கலந்து இடவேண்டும்.

ஏக்கருக்கு 600 முதல் 750 கிலோ விதை மஞ்சள் பயன்படுத்தலாம். கிழங்கு அழுகல் மற்றும் செதில்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த நடவுக்கு முன் விதைக் கிழங்குகளை கார்பன்டசிம் ஒரு கிராம் மற்றும் மோனோ குரோட்டாபாஸ் இரண்டு மில்லி சேர்த்து ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்த கரைசலில், 30 நிமிடங்கள் ஊற வைக்கவேண்டும். நேர்த்தி செய்த விதைக் கிழங்குகளை 45 செ.மீ., இடைவெளியில் பார் அமைத்து, 15 செ.மீ., இடைவெளியில், 4 செ.மீ., ஆழத்தில் நடவேண்டும். நடவுக்கு முன்பும், மூன்று நாள் கழித்தும் உயிர் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நடவு செய்த 30, 60, 90 நாட்களில் கையால் களை எடுக்க வேண்டும்.

மஞ்சள் ஊடுபயிராக வெங்காயம், கொத்தமல்லி, தண்டுக்கீரை, பயறுவகை, வெந்தயக்கீரை ஆகியவற்றை பயிரிடலாம். தவிர, வாழை, மிளகாய், கனகாம்பரம், கத்தரி போன்ற பயிர்களை ஊடுபயிராக பயன்படுத்தக் கூடாது. செண்டுமல்லி ஊடுபயிராக பயரிட்டால், மஞ்சளில் நூற்புழுத் தாக்குதலை ஓரளவு கட்டுப்படுத்தலாம். தோட்டக்கலைத் துறை வட்டார அலுவலகங்களை, விவசாயிகள் அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**ரசாயன உரங்கள் குறித்து புகார் செய்ய கண்காணிப்பு அறை**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,23:31 IST

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மாவட்டத்தில், விவசாயிகள் தங்கள் பிரச்சனைகள் குறித்து தெரிந்துக் கொள்ள கண்காணிப்பு அறை துவங்கப்பட்டுள்ளது. வேளாண்மை இணை இயக்குனர் குரூராஜ்சிங் தனது அறிக்கையில் கூறியதாவது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பு பருவத்திற்கு தேவையான ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் தேவையான அளவிற்கு தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டள்ளது. ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வினியோகத்தில், குறைகள் இருந்தாலோ அல்லது

அதிகபட்ச சில்லரை விலையைவிட அதிகமான விலைக்கு விற்றாலோ, அதுதொடர்பான புகார்களை தெரிவிக்க, வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில், கண்காணிப்பு அறை துவக்கப்பட்டுள்ளது. இந்த கண்காணிப்பு அறை, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தினமும் செயல்படும். எனவே, காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தொடர்பான புகார்களை கண்காணிப்பு அறை தொலைபேசி எண் 044 - 27222977 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும், அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர்களையும் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இவ்வாறு குரூராஜ்சி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம் இல்லாமல் நெல்லை குறைந்த விலைக்கு விற்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,23:28 IST

செய்யூர் : சூனாம்பேட்டில், நேரடி நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், விளைவித்த நெல்லை, விவசாயிகள், இடைத்தரகர்களிடம் மிகவும் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது. செய்யூர் தாலுகா சித்தாமூர் ஒன்றியத்தில் உள்ளது சூனாம்பேடு. சூனாம்பேட்டை சுற்றி அகரம், கயநல்லூர், இல்லீடு, காவனூர், புதுப்பட்டு, வில்லிப்பாக்கம், கடுக்கலூர், வெடால், வன்னியநல்லூர், அரசூர், ஈசூர், சிறுமைலூர் என 30க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் நல்ல நீர்வளம் உள்ளதால், ஆண்டிற்கு மூன்று போகம் நெல் பயிரிடப்படுகிறது. விவசாயிகள் கடன் வாங்கி பயிரிட்டு, விளைவிக்கும் நெல்லை நல்ல விலைக்கு விற்க முடிவதில்லை. இதற்கு காரணம் அருகில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இல்லாததுதான். இதனால் நெல்லை குறைந்த விலைக்கு வியாபாரிகளிடம் விற்க வேண்டிய நிலை உள்ளது.

நெல்கொள்முதல் நிலையங்களில் ஒரு கிலோ சன்னரக நெல் 11 ரூபாய்க்கும், குண்டுரக நெல் 10 ரூபாய் 50 காசுக்கும் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆனால் வியாபாரிகள் ஒரு மூட்டை 80 கிலோ நெல்லை வாங்கிக் கொண்டு 75 கிலோவிற்கு மட்டுமே பணம் கொடுக்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு ஒரு மூட்டைக்கு 5 கிலோ இழப்பு ஏற்படுகிறது. மேலும் நெல் வியாபாரிகள் உடனே பணம் கொடுக்காமல் ஒரு மாதம், இரண்டு மாதம் கழித்து பணம் கொடுக்கின்றனர். நெல் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் இடைத்தரகர்கள் உண்டு. இவர்கள் மூலமே நெல்கொள்முதல் செய்யப்படுவதால் இவர்களுக்கும் பணம் தர வேண்டியுள்ளது. 80 கிலோ மூட்டை குண்டுரக நெல் 640 ரூபாய்க்கும், சன்னரக நெல் 700 ரூபாய்க்கும் வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

விவசாயிகள் நேரடி கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்தால் குண்டுரக நெல்லுக்கு மூட்டைக்கு 200 ரூபாயும், சன்னரக நெல்லுக்கு 180 ரூபாயும் கூடுதலாக கிடைக்கும். அகரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கஜேந்திரன் கூறியதாவது: நிலத்தை உழுது பயிரிட்டு அறுவடை செய்வது வரை, ஏக்கருக்கு 7 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. மூன்று ஏக்கரில் எனக்கு 46 மூட்டை நெல் கிடைக்கிறது. நெல்லை விற்க 18 கி.மீ., முதல் 25 கி.மீ., தூரத்தில் உள்ள வில்வராயநல்லூர், சித்தாமூர் ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களுக்கு செல்ல வேண்டும். இதற்கு சரியான போக்குவரத்து வசதியும் இல்லை. இதனால் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டியுள்ளது. சூனாம்பேட்டில் நேரடி கொள்முதல் நிலையம் அமைத்தால், சுற்றியுள்ள 30க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் பயன்பெறுவர், என்றார்.

**விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,23:51 IST

நெல்லிக்குப்பம்: நெல்லிக்குப்பம் அடுத்த மேல்பட்டாம்பாக்கத்தில் விவசாயிகளுக்கு நெல் விதை கிராம திட்டம் பயிற்சி, மணிலா பயிரில் அதிக மகசூல் எடுத்தவர்களுக்கு பரிசளிப்பு விழா நடந்தது.வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன் தலைமை தாங்கினார். பேரூராட்சி தலைவர் ஜெயமூர்த்தி முன்னிலை வகித்தார். உதவி இயக்குனர் சம்பத்குமார் வரவேற்றார். விவசாயிகளுக்கு இடுபொருட்களை சிவக்கொழுந்து எம்.எல்.ஏ., வழங்கினார்.உதவி இயக்குனர்கள் அரிதாஸ், மல்லிகா, ராமச்சந்திரன், அலுவலர் சந்திரராசு, தே.மு.தி.க., செயலர் தட்சணாமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.விழாவில் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான தரமான விதைகளை தாங்களே உற்பத்தி செய்வது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.

**கால்நடைகளை பாதுகாக்க ஒரு லட்சம் "டோஸ்' மருந்து**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,22:40 IST

திருப்பூர் : நோய் தடுப்பு நடவடிக்கையாக, கால்நடைகளை பாதுகாக்க ஒரு லட்சம் "டோஸ்' மருந்து, திருப்பூர் மாவட்ட கால்நடைத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. போதிய பராமரிப்பு, வளர்ப்பதற்கு ஏற்ற இட வசதியின்மை, சிகிச்சைக்கு அழைத்து வர போக்குவரத்து சிரமங்கள் உள்ளிட்ட காரணங்களால், பெரும்பாலான இடங்களில் கால்நடை வளர்ப்பு வெகுவாக குறைந்து

விட்டது. தற்போதுள்ள கால்நடைகளை பாதுகாக்க, கால்நடை வளர்ப்போரை ஊக்கப்படுத்த, கால்நடை பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் மூலம் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை கால்நடை பராமரிப்பு மற்றும் நோய் தடுப்பு குறித்து அந்தந்த பகுதி கால்நடை மருத்துவமனை சார்பில் இலவச முகாம் நடத்தப்படுகிறது. முகாமுக்கு தேவையான மருந்து ஆண்டுக்கு இருமுறை வழங்கப்படும். அதன்படி, இந்தாண்டுக்காக ஒரு லட்சம் "டோஸ்' மருந்து, கால்நடை துறைக்கு வந்துள்ளன. விரைவில், கால்நடை மருத்துவமனை மற்றும் மருந்தகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

**திசு வளர்ப்பு பேரீட்சையில் அதிக லாபம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,01:11 IST

அவிநாசி : அவிநாசி அருகே முருகம்பாளையத்தில், திசு வளர்ப்பு நாற்று மூலம் பேரீட்சை சாகுபடி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவிநாசி அருகே புதுப்பாளையம் ஊராட்சி, முருகம்பாளையம் - எல்லை முருங்கை தோட்டத்தை சேர்ந்தவர் முருகவேல். இவர், தனது தோட்டத்தில் திசு வளர்ப்பு மூலம் உருவாக்கப்பட்ட மரங்களில் இருந்து, அதிக சத்துள்ள பேரீட்சைகளை உற்பத்தி செய்து வருகிறார். இதையறிந்த கலெக்டர் மதிவாணன், முன்னாள் எம்.எல்.ஏ., பழனிசாமி மற்றும் திருப்பூர், கோவை மாவட்ட முன்னோடி விவசாயிகள், முருகம்பாளையம் சென்றனர். தோட்டத்தில் விளைவிக்கப்பட்டு வரும் பேரீட்சை மரங்களை பார்வையிட்டு, அது குறித்து அவரிடம் கேட்டறிந்தார்.

விவசாயி முருகவேல் கூறியதாவது: திசு வளர்ப்பு மூலம் நாற்றுகள் உருவாக்கி, வளர்த்து வருகிறேன். 2009 பிப்., 2ல் நாற்று நடப்பட்டது. இதுபோன்ற பேரீட்சை ரகம், குறைந்தது நான்கு ஆண்டில் உற்பத்தியை கொடுக்கும். ஆனால், 28 மாதங்களில் உற்பத்தி எடுத்துள்ளேன். முதல் தரமாக உள் ள இப்பேரீட்சை நாற்று, குஜராத் மாநிலத்தில் இருந்து ரூ.3,500க்கு (ஒரு நாற்று) வாங்கினேன். ஏக்கருக்கு 170 நாற்றுகளை நட்டு, உரமிட்டு விவசாயம் செய்கிறேன். மிகவும் கவனத்துடன் பயிர் செய்தால் நல்ல மகசூலுடன், நல்ல லாபமும் கிடைக்கும். இந்தியாவில் ஆண்டுக்கு 6,000 கோடி ரூபாய் மதிப்புள்ள 7,000 டன் பேரீட்சை இறக்குமதி செய்யப்படுகிறது.

நமது நாட்டின் தேவைக்கு நாமே பேரீட்சை பயிர் செய்தால், குறைந்த விலைக்கு விற்பனை செய்யலாம். இங்கு விø ளந்த பேரீட்சைகளை ஏற்றுமதி செய்யுமாறு பலர் என்னிடம் யோசனை கூறினர்; நான் அதை மறுத்து விட்டேன், என்றார். கலெக்டர் மதிவாணன் கூறுகையில்,

""தமிழகத்தில் இரண்டாவது நபராக, நமது மாவட்டத்தில் முருகவேல் இந்த பேரீட்சைகளை பயிரிட்டுள்ளார். முழுக்க முழுக்க திசு வளர்ப்பு, உள்நாட்டு விவசாய தொழில் நுட்பம் மூலம் விளைந்துள்ள இந்த பேரீட்சை ரகங்கள், நல்ல சுவையுடன் மிகுந்த சத்தாக உள்ளது. முருகவேல் போன்ற பல விவசாயிகள், இதே ரக பேரீட்சை விளைவித்து லாபம் பெறலாம்," என்றார்.

**அதிகரிக்கும் தீவன செலவால் விவசாயிகள் தவிப்பு : கழிவுபஞ்சை கறவை மாடுகளுக்கு தரும் அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,22:40 IST

சுல்தான்பேட்டை : கறவை மாடுகளின் தீவன செலவு அதிகரித்து வருவதால், விவசாயிகள் தவிக்கின்றனர்; கழிவுபஞ்சை சுத்தப்படுத்தி, மாடுகளுக்கு தீவனமாக தருகின்றனர். சுல்தான்பேட்டை வட்டாரத்தில் விவசாயத்தை அடுத்து, கறவைமாடு வளர்ப்பு தொழில் பிரதானமாக உள்ளது. குறைந்த முதலீட்டில் கட்டுப்படியான உபரிவருமானத்தை தருவதால், கறவை மாடு வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். தற்போது 5,000க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளாக சுல்தான்பேட்டை வட்டாரத்தில் போதிய மழைபொழிவு இல்லாததால் பசுந்தீவனங்கள் உற்பத்தி கடும் பாதிப்பு அடைந்தது. கறவை மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் சோளத்தட்டுகளை மாடுகளுக்கு தீவனமாக தந்து வருகின்றனர். பால் உற்பத்தி அதிகரிப்புக்காக பருத்திகொட்டை, தவிடு, கடலை புண்ணாக்கு, கலப்பு தீவனங்களை கறவை மாடுகளுக்கு தருகின்றனர்.

தற்போது கலப்பு தீவனம் கிலோ 13 ரூபாய்; பருத்திக்கொட்டை 16 ரூபாய்; சாதாரண உமி தவிடு 6 ரூபாய்; பாளை தவிடு 9 ரூபாய்; கடலை புண்ணாக்கு 32 ரூபாய் ஆகிய விலைகளில் உள்ளது.தீவனங்களின் தட்டுப்பாடுமற்றும் தேவைக்கு ஏற்ப விலைகளில் ஏற்றம், இறக்கம் காணப்படுகிறது. தற்போது ஒரு மாடுக்கு சராசரியாக தினமும் 100 ரூபாய் வரை தீவன செலவு ஏற்படுகிறது. இச்செலவை சமாளிக்க முடியாத விவசாயிகள் பலர் தேனி, ராஜபாளையம், அருப்புக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஜின்னிங் பேக்டரியில் உள்ள கழிவுபஞ்சை கிலோ ஐந்து ரூபாய் விலைக்கு வாங்குகின்றனர்; பஞ்சில் மாடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் இரும்பு துகள், குண்டூசி போன்றவை உள்ளதா என சோதித்து, பஞ்சை பிரித்து எடுத்து தண்ணீரில் கழிவு பஞ்சை கலந்து அல்லது அப்படியே தீவனமாக மாடுகளுக்கு தருகின்றனர். பெட்ரோல், டீசல் விலை உயர்வால் கழிவு பஞ்சு விலையும் கிலோவுக்கு இரண்டு ரூபாய் உயர்ந்து, 7 ரூபாயாகி உள்ளது. கழிவு பஞ்சுவிலை உயர்வு கறவை மாடு வளர்ப்பு விவசாயிகளை கலக்கமடைய செய்துள்ளது. பசும்பால் ஒரு லிட்டர் 13 முதல் 15 ரூபாய், எருமை பால் ஒரு லிட்டர்

18 முதல் 20 ரூபாய் வரை மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், கறவை மாடுவளர்ப்பில் போதிய வருமானமின்றி விவசாயிகள் தவிக்கின்றனர்.

**ஸ்டிராபெரி, "ஐஸ்பெர்க் லெட்யூஸ்' சாகுபடியை அதிகரிக்க திட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,01:21 IST

குன்னூர் : ஸ்டிராபெரி பழம், "ஐஸ்பெர்க் லெட்யூஸ்' காய் வகைக்கு வெளிநாட்டு சந்தை அதிகளவில் இருப்பதால், நீலகிரியில் சுமார் 225 ஏக்கர் பரப்பளவில் அவற்றை சாகுபடி செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரி கூக்கல்தொரை, கொதுமுடி, நெடுகுளா, தொரையட்டி, நஞ்சநாடு, ஊட்டி, தங்காடு, குந்தா, சோலூர், கேத்தி மற்றும் குன்னூர் தூதூர்மட்டம் உட்பட சுற்றுவட்டார பகுதிகளில் ஸ்டிராபெரி, ஐஸ்பெர்க் லெட்யூஸ் பரவலாக சாகுபடி செய்யப்படுகிறது. உள்ளூர் சந்தைக்கே அவை, போதுமானதாக இல்லாத நிலையில், ஏற்றுமதி சந்தைக்குரிய உற்பத்தி இல்லை.

சவுதி அரேபியாவில் உள்ள தனியார் நிறுவனத்தினர், நீலகிரியில் ஸ்டிராபெரி, ஐஸ்பெர்க் லெட்யூஸ் சாகுபடியை ஊக்குவிக்க திட்டமிட்டுள்ளனர். நீலகிரி தோட்ட தொழிற் நுட்ப நிறுவன ("நிட்கோ') இயக்குனரும், முதன்மை செயல் அலு வலருமான சிவன் கூறியதாவது: சவுதி அரேபியாவில் உள்ள "கல்ப் புரொடி யூசஸ்' நிறுவனம், ஆண் டுக்கு 1,200 டன் ஸ்டிரா பெரி, 3,500 டன் ஐஸ் பெர்க் லெட்யூஸ் உட்பட சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள பழம், காய் கறிகளை இறக்குமதி செய்து கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது. நீலகிரி மாவட்டத்துக்கு முதன் முறையாக கிடைத் துள்ள இந்த ஏற்றுமதி வாய்ப்பின் முதற்கட் டமாக, "நிட்கோ' நிறுவனம், சுமார் 900 விவசாயிகளை ஒருங்கிணைத்து 25 ஏக்கரில் ஸ்டிராபெரி பழங்கள், 200 ஏக்கரில் ஐஸ்பெர்க் லெட்யூஸ் காய்கறியை உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது.

நிட்கோவில் உறுப்பினர்களாக இணையும் விவசாயிகளுக்கு தேவையான நாற்று, விதைகளை வழங்குவதுடன், அவர்களுக்கு வங்கிக் கடன் ஏற்பாடு செய்து கொடுப்பதுடன், "ஊட்டி பிரஷ்' என்ற பெயரில் அவற்றை சந்தைப்படுத்தவும் திட்டம் வகுக் கப்பட்டுள்ளது. ஸ்டிராபெரி நாத் துகள் கலிபோர்னியாவில் இருந் தும், ஐஸ்பெர்க் லெட்யூஸ் விதை கள் பிரான்சு, ஜெர்மனியில் இருந் தும் வாங்கப்படவுள்ளன. விவ சாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்வந்துள்ளது. நீலகிரியில் உற்பத்தி செய்யப் படும் அனைத்து வகையான காய் கறிகளையும், எவ்வித சேதமுமின்றி சந்தைப்படுத்த, குளிர்சாதன வசதி யுடன் கூடிய தோட்ட கூட்டமைப்பு பூங்கா, மத்திய, மாநில அரசின் மானிய உதவியுடன், ஒன்பது கோடி ரூபாய் மதிப்பில் ஊட்டி முத்தோரை பகுதியில் அமைக்கும் பணி நடந்து வருகிறது. தவிர, மூலிகை

தேயிலை தூளுக்கு, வெளிநாடுகளில் கிராக்கி அதிகம் என்பதால், குன்னூர் அருகேயுள்ள தனியார் தேயிலை தோட்ட நிர்வாகம் ஆர்கானிக் தேயிலை உற்பத்தி மேற்கொள்ள முன்வந்துள்ளது; இதை சந்தைப்படுத்தும் பொறுப்பை "நிட்கோ' ஏற்றுள்ளது. இவ்வாறு, சிவன் கூறினார்.

**குளித்தலை உழவர் சந்தையில் காய்கறி சாகுபடிக்கான பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,00:03 IST

கரூர்: குளித்தலை உழவர் சந்தையில் வரும் 18 ம் தேதி காய்கறி சாகுபடிகளுக்கான சிறப்பு பயிற்சி நடக்கிறது. குளித்தலை உழவர் சந்தையில் நாள்தோறும் சராசரியாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள எட்டு டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனையாகிறது. 60 க்கும் மேற்பட்ட விவசாயிகளும், 2,300 க்கும் மேற்பட்ட பொதுமக்களும் குளித்தலை உழவர் சந்தைகக்கு வருகின்றனர். மேலும் விவசாயிகள் தங்களது பண்ணைகளில் உற்பத்தி செய்யும் பால் மற்றும் தயிர்களை உழவர் சந்தையில் விற்பனை செய்து பயன் அடைந்து வருகின்றனர்.

மழைக்காலம் நெருங்கியுள்ள நிலையில் காய்கறிகள் சாகுபடிகள் அதிகளவில் தொடங்கவுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு குளித்தலை உழவர் சந்தையில் காய்கறிகள் சாகுபடி குறித்த பயிற்சி வரும் 18 ம் தேதி நடக்கிறது. "பயிற்சியில் தோட்டக்கலை அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்க உள்ளதால், குளித்தலை மற்றும் கிருஷ்ணாராயபுரம் வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம்' என வேளாண் வணிக துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அபூர்வ வகை பால் சுறா மீன் சிக்கியது : மீனவர்கள் கொடுக்க மறுத்து மறியல் செய்ததால் பரபரப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 10,2011,02:45 IST

தூத்துக்குடி : தருவைகுளத்தில் மீனவர் வலையில் தடை செய்யப்பட்ட மிக அபூர்வ வகையான பால் சுறா மீன் சிக்கியது. அந்த மீனை வனத்துறையினர் பறிமுதல் செய்ய முயன்றபோது கொடுக்க மறுத்த மீனவர்கள் வன அதிகாரியை மறித்து முற்றுகையிட்டு மறியல் செய்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. கடலில் மீன்கள் அதிக உற்பத்திக்கு மிகவும் உறுதுணையாக இருக்கின்ற மீன்வகையும், வேகமாக அழிந்து வரும் அபூர்வ மீன் வகைகளில் ஒன்றானது பால்

சுறா மீன். அழிந்து வரக் கூடிய மீன் இனம் என்பதால் 1972ம் ஆண்டு வனத்துறை சட்டப்பட்டி இந்த மீன்களை யாரும் பிடிக்க கூடாது என்று தடை விதிக்கப்பட்டது.

மன்னார் வளைகுடா உயிரின காப்பக அறக்கட்டளை மூலம் மத்திய அரசு நல்லதண்ணிதீவினை தேசிய கடல்வாழ் உயிரின காப்பகமாக அறிவித்துள்ளது. இதனை அரசு காப்பகமாக மாற்ற வேண்டும் என்றால் ஆர்.டி.ஓ விசிட் செய்து அதனை ஆய்வு செய்து கலெக்டருக்கு ரிப்போர்ட் செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் கலெக்டர் இதற்கான அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைப்பார். இதுதான் நடைமுறையாகும்.நேற்று நல்ல தண்ணீ தீவினை ஆய்வு செய்ய செட்டில்மென்ட் அதிகாரி ராமநாதபுரம் ஆர்.டி.ஓ சென்றார். ஆய்வு பணியினை முடித்து விட்டு ஆர்.டி.ஓவை வழியனுப்பு விட்டு மன்னார் வளைகுடா ரேஞ்சர் நாகராஜன் தலைமையில் பாரஸ்கார்டு காளிதாஸ், ராஜ்குமார் ஆகியோர் வேம்பாரில் இருந்து தூத்துக்குடி நோக்கி வரும் போது தருவைகுளத்திற்கு கடல் பகுதிக்கு சென்றனர். அப்போது மீன்கள் ஏலம் நடந்து கொண்டிருந்தது. நேற்று வந்த மீனை ஏலம் விட்டு கொண்டிருந்தனர்.

இதைவனத்துறை ரேஞ்சர் நாகராஜன் அதனை பார்வையிட்டு கொண்டிருந்தார்.அப்போது சீலா மீனுக்கு இடையே பால் சுறா என்னும் தடை செய்யப்பட்ட அபூர்வ மீன் இருப்பதை பார்த்தார். உடனடியாக ஏலத்தை நிறுத்திய வனத்துறையினர் பால் சுறா மீன் தடை செய்யப்பட்ட மீன், வலையில் சிக்கினாலோ, தெரியாமல் பிடிபட்டு வந்தாலோ வனத்துறையினரிடம் அதனை மீனவர்கள் ஒப்படைக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதனை தெரிவிக்காமல் பால் சுறா மீனையும் சீலா மீனுடன் ஏலம் விட முயன்றது தவறாகும்.

உடனடியாக அந்த மீனை தாங்கள். கடலில் விட வேண்டும் என்று வனத்துறையினர் கூறினர். ஆனால் வழக்கு போன்ற பிரச்னை வந்துவிடும் என்றதால் மீனவர்கள் சுமார் இரண்டு கிலோ எடை கொண்ட பால் சுறா மீனை வனத்துறையினரிடம் கொடுக்க மறுத்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. அதற்குள் அங்கு கூடிய சுமார் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் வனத்துறை ரேஞ்சருடன் ஜீப்பையும் முற்றுகையிட்டு மறியல் செய்தனர்.

இதனை தொடர்ந்து தடை செய்யப்பட்ட மீன்கள் விபரம் முழுவதையும் ரேஞ்சர் நாகராஜன் மீனவர்களிடம் விளக்கினார். வழக்கு போன்ற பிரச்னை வந்துவிடும். இதனால் பால் சுறா மீனை ஒப்படைத்துவிடுங்கள் என்று கூறினார்.நீண்ட இழுபறிக்கு பின்னர் மீனவர்கள் பால் சுறா மீனை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். பின்னர் வனத்துறையினர் இறந்த பால் சுறா மீனை கடலில் கொண்டு விட்டனர். இதற்கு மீனவர்களும் உதவினர்.பால் சுறா மீன் சிக்கிய பிரச்னையால் தருவைகுளத்தில் சில மணிநேரம் பரபரப்பு காணப்பட்டது. தடை செய்யப்பட்ட

மீன்களை மீனவர்கள் பிடிக்க கூடாது. தெரியாமல் வலையில் சிக்கி விட்டால் உடனடியாக வனத்துறையில் ஒப்படைக்க வேண்டும். இல்லை என்றால் மிக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரேஞ்சர் நாகராஜன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தினத்தந்தி DAILY THANTHI

## வேளாண் காப்பீட்டு திட்டத்தில் தமிழக விவசாயிகள் 15 லட்சம் பேருக்கு ரூ.1,241 கோடி நஷ்ட ஈடு மண்டல மேலாளர் தகவல்

*கோவை,ஜூலை.11–*

*வேளாண் காப்பீட்டு திட்டத்தில் தமிழக விவசாயிகள் 15 லட்சம் பேருக்கு ரூ.1,241 கோடி நஷ்டஈடு வழங்கப்பட்டு உள்ளது என்று மண்டல மேலாளர் அன்பரசு தெரிவித்து உள்ளார்.*

*வேளாண் காப்பீடு*

*நெல் குறுவை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் வேளாண் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். இந்த திட்டத்தில் சேரும் விவசாயிகள் நெல் குறுவை பயிருக்கு பிரக்கா அளவில் மகசூல், உத்திரவாத மகசூல் அளவு ஆகியவை குறைந்தால் நஷ்டஈடு வழங்கப்படும்.*

*அதன்படி இதுவரை சுமார் 15 லட்சம் தமிழக விவசாயிகளுக்கு ரூ.1,241 கோடி நஷ்டஈடு வழங்கப்பட்டு உள்ளது. இதற்கு விவசாயிகளுடம் இருந்து பெறப்பட்ட பிரீமியம் தொகை ரூ.171 கோடி மட்டுமே. நெல் குறுவை பயிருக்கு மத்திய அரசின் 50 சதவீத மானியம், மாநில அரசின் 55 சதவீதம் போக கடன் பெறுவதற்கு சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ.153. இதற்கு மதிப்பு ரூ.13,556.*

*பிரீமியத்தின் மதிப்பு*

*விவசாயிகள் விரும்பினால், கூடுதலாக ரூ.132 செலுத்தி ரூ.9,036 மதிப்பை பெறலாம். கடன் பெறா விவசாயிகள் 55 சதவீதம் மானியம் போக செலுத்த வேண்டிய மொத்த பிரீமியம் ஏக்கருக்கு ரூ.286. இதன் மதிப்பு ரூ.22,592. பயிர் கடன் பெறா ஏனைய விவசாயிகள் செலுத்த வேண்டிய குறைந்த பட்ச பிரீமியம் ஏக்கருக்கு ரூ.169. இதன் மதிப்பு ரூ.13,556.*

*கூடுதலாக ரூ.147 பிரீமியம் செலுத்தினால், கூடுதலாக ரூ.9,036 காப்பீட்டு மதிப்பை பெற முடியும். பயிர் கடன் பெறா விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் ரூ.316.*

இதன் மதிப்பு ரூ.22,592. எனவே அனைத்து கடன்பெறா விவசாயிகளும், நெல் குறுவை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

15–ந் தேதி கடைசி

அதற்கு விவசாயிகள் அருகில் உள்ள வேளாண்மைத்துறையை அணுகி முன்மொழிவு படிவத்தை பெற்று, பூர்த்தி செய்து சிட்டா அல்லது அடங்கல் அல்லது கிராம நிர்வாக அதிகாரியிடம் இருந்து பெற்ற சான்றிதழ் பெற்று, சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கியில் சென்று பயிர் காப்பீட்டு திட்டக்கணக்கில் பிரிமீயத்தை செலுத்தலாம். வருகிற 15–ந் தேதி திட்டத்தில் சேர கடைசி நாள். மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மைத்துறை விவசாயிகள் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம். இந்த தகவலை இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவன மண்டல மேலாளர் அன்பரசு தெரிவித்து உள்ளார்.

## கேரளாவில் ரூ.2 கோடி செலவில் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை விவசாயத்துறை மந்திரி மோகனன் பேட்டி

கோழிக்கோடு,ஜூலை.11–

கேரளாவில் ரூ.2 கோடி செலவில் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயத்துறை மந்திரி மோகனன் கூறினார்.

ரூ.2 கோடி செலவில்

கேரள மாநிலம் கோழிக்கோட்டில் விவசாயத்துறை மந்திரி மோகனன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

கேரளாவில் இன்னும் 2 ஆண்டுகளுக்குள் காய்கறி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது 60 சதவீத காய்கறிகள் வெளிமாநிலங்களில் இருந்து கேரளாவுக்கு வருகிறது, மீதி 40 சதவீத காய்கறிகள் மட்டுமே கேரளாவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

எனவே ரூ.2 கோடி செலவில் 1 லட்சம் ஹெக்டர் பரப்பளவில் காய்கறிகளை பயிரிட்டு, அவற்றின் உற்பத்தியை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1000 ஏக்கர் தரிசு நிலம்

அதற்காக தமிழகம், மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து தரமான விதைகள் வாங்கி வந்து பயிரிடப்பட உள்ளது. மேலும் திருச்சூர் மாவட்டம் மண்ணுத்தியில் உள்ள விவசாய பல்கலைக்கழகத்தில் 1000 ஏக்கர் தரிசு நிலம் உள்ளது.

அந்த நிலத்தை பல்கலைக்கழத்திடம் இருந்து வாங்கி, அதில் காய்கறி பயிரிடப்படும்.

அதற்காக பல்கலைக்கழக நிர்வாகத்துடன், அரசு அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## கோவை தடாகம் பகுதியில் மயக்க ஊசி செலுத்திய காட்டு யானை சாவு இரவோடு இரவாக வனத்துறையினர் யானையை புதைத்தனர்

கோவை,ஜூலை.11–

ரேடியோ காலர் கருவி பொருத்துவதற்காக மயக்க ஊசி செலுத்தப்பட்ட யானை பள்ளத்தில் விழுந்து இறந்தது. இரவோடு, இரவாக அந்த யானையை வனத்துறையினர் புதைத்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதிக வீரியமிக்க மயக்க ஊசி செலுத்தியதால் யானை இறந்து இருக்கலாமா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

யானைகளின் நடமாட்டம்

கோவை மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்களுக்குள் அடிக்கடி காட்டு யானைகள் புகுந்து சேதப்படுத்தி வருகின்றன. காட்டு யானைகள் நுழைவதை தடுக்க வனத்துறையினர் எடுக்கும் நடவடிக்கைகள் முழு அளவில் பலன் அளிக்கவில்லை. இதைத்தொடர்ந்து காட்டு யானைகளில் கழுத்தில் ரேடியோ காலர் என்ற கருவி பொருத்தி அந்த யானைகளின் நடமாட்டத்தை கண்காணிக்க வனத்துறையினர் முடிவு செய்தனர்.

முதல்கட்டமாக காட்டு யானைகளை பிடிக்க பொள்ளாச்சி டாப்சிலிப் பகுதியில் இருந்து கபில்தேவ், நஞ்சன் ஆகிய 2 கும்கி யானைகள் வரவழைக்கப்பட்டு, அவற்றின் உதவியுடன் போளுவாம்பட்டி வனச்சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரிந்த ஒரு பெண் யானைக்கு ரேடியோ காலர் கருவி பொருத்தப்பட்டது. இந்த யானையின் நடமாட்டம் ஜி.பி.எஸ். முறைப்படி செயற்கைகோள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வனப்பகுதியில் தீவிர கண்காணிப்பு

அதைத் தொடர்ந்து பெரியநாயக்கன்பாளையம் வனச்சரக பகுதியில் இருந்து அடிக்கடி ஊருக்குள் புகும் காட்டு யானை ஒன்றுக்கு இந்த கருவியை பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. டபிள்யூ. டபிள்யூ.எப்.குழு மோகன்ராஜ் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர் அஜய் தேசாய் மேற்பார்வையில் வனத்துறையின் கால்நடை மருத்துவர்கள் டாக்டர் மனோகரன்,டாக்டர் கலைவாணன், மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகம், டாப்சிலிப் யானை முகாமை சேர்ந்த யானை காவலர்கள் அடங்கிய வனத்துறையின் சிறப்பு குழு மற்றும் வனக்காவலர்கள் 30–க்கும் மேற்பட்டவர்கள்

பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகத்தில் உள்ள தடாகம் காப்பு காட்டுப்பகுதிக்குள் முகாமிட்டனர். காட்டு யானைகளை தேடிச்சென்றபோது, ஒரு குட்டியானை மட்டும் சுற்றித்திரிந்ததை அவர்கள் பார்த்தனர்.

குட்டியானைக்கு ரேடியோ காலர் கருவி பொருத்தினால், கழுத்தில் இருந்து எளிதாக கீழே விழுந்து விடும் என்பதால் இந்த முயற்சி கைவிடப்பட்டது.

யானை சாவு

இதைத்தொடர்ந்து விடிய, விடிய வனத்துறையினர் சின்னதடாகம் காட்டுக்குள் முகாமிட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு அங்கு வந்த 20 வயது மதிக்கதக்க காட்டுயானைக்கு வனத்துறையினர் ரேடியோ காலர் கருவி பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இரவு 11 மணி அளவில் மயக்க ஊசியை துப்பாக்கி மூலம் செலுத்தினார்கள். அப்போது யானை மிரண்டு ஓடியது. சிறிது நேரத்தில் பள்ளத்தில் விழுந்து இறந்து போனது. அதிகாலை 3 மணி அளவில் இறந்து கிடந்த யானையை பார்த்த வனத்துறையினர் இரவோடு இரவாக அந்த யானையை புதைத்து விட்டனர். 20 வயது மதிக்கத்தக்க காட்டு யானை மிகவும் திடகாத்திரமாக இருந்தது. ஆண் யானை மயக்க ஊசியினால் இறந்து போனதால், அந்த பகுதியில் யானைகளின் பெருக்கத்துக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. காட்டு யானைக்கு அதிக வீரியம் மிகுந்த மயக்க மருந்து செலுத்தியதால் இறந்து இருக்கலாம் என்றும் சர்ச்சை கிளம்பி உள்ளது. பத்திரிகையாளர்கள் மற்றும் டி.வி. மீடியாக்கள் வருவதற்கு முன்பு காட்டு யானையை புதைத்தது ஏன்? என்றும், இதில் உள்ள மர்ம காரணங்கள் குறித்தும் வனத்துறையின் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

தினகரன்

# கொள்முதல் குறைவால் தேயிலை தூள் தேக்கம்

பதிவு செய்த நாள் 7/11/2011 3:54:44



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் ஏலம் நடைபெற்றது. 16.83 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 11.38 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.45 லட்சம் கிலோவும் அடங்கும். பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகளின் வியாபாரிகள் குறைந்த அளவிலான தேயிலை தூளை கொள்முதல் செய்தனர். உள்ளூர் வர்த்தகர்களும் தரமான தேயிலை தூளை மட்டும் கணிசமாக வாங்கினர். இந்த வார ஏலத்தில் 33 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு (ரூ.3 வரை விலை சரிந்தது.

இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ (ரூ.36 முதல் ஸி40 வரையிலும், உயர் வகை (ரூ.80 முதல் (ரூ.140 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை (ரூ.42 முதல் (ரூ.47 வரையிலும், உயர் வகை (ரூ.85 முதல் (ரூ.140 வரையிலும் விலை கிடைத்தது. அடுத்த ஏலத்துக்காக 17.17 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.